# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

## ஆணை நாள் 18.05.2026

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 5883/விசாரணை/E/2024**

திரு க.மனோகரன் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
நிர்வாக அலுவலர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர் (தொ.அ,ஆ) அலுவலகம்,
சென்னை – 600 023

******

## ஆணை

1) இவ்வாணையத்தின் 12.02.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (தொ.அ,ஆ) அலுவலக உதவியாளர் திரு எஸ்.கிருபாசங்கர், இவ்வாணையத்தில் 13.05.2026 அன்று ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) மேற்படி அறிக்கையை பரிசீலித்த ஆணையம், கீழ்க்கண்டவற்றை பதிவு செய்கிறது:-

i. மனுதாரர் தனது 6(1) மனுவை தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பொதுத் தகவல் அலுவலருக்கு 12.10.2023 அன்று அனுப்பியுள்ளார். அம்மனு, அங்கிருந்து பிரிவு 6(3)-கீழ் சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழக மண்டல அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு 25.10.2023 அன்று உரிய நடவடிக்கைகாக மாற்றப்பட்டுள்ளது.

ii. அதனை தொடர்ந்து தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் பொதுத் தகவல் அலுவலர், அம்மனு தங்கள் வரம்பிற்குள் வராது என்பதால், அம்மனுவை 07.11.2023 அன்று சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, அது குறித்த தகவலை மனுதாரருக்கும் தெரிவித்துள்ளார்

iii. இதனிடையே, மனுதாரர் இதே மனுவை, தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்புப் பிரிவிற்கும் அனுப்பியுள்ளார். அம்மனு, இணையதளம் வாயிலாக மாநில தொழிலாளர் அரசு ஈட்டுறுதி துறையின் இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு, 08.10.2023, அன்று இணையதளம் வாயிலாகவே அளிக்கப்பட்டுள்ள பதிலில், மனுதாரர் குறிப்பிடும் பொருள் தங்கள்

அலுவலகம் சார்ந்ததல்ல என்றும், ஆகவே, அம்மனு நுங்கம்பாக்கத்திலுள்ள தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழக மண்டல அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பதில் அளிக்கப்பட்டு, மனுதாரரும் அதை பெற்றுக் கொண்டு, இணையதளம் மூலம் திருப்தியடைவதாக தெரிவித்துள்ளார்.

iv. அதன் பின்னர், மனுதாரர் 22.04.2024 அன்று முதல் மேல்முறையீட்டு மனுவை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் (தொஅஈ) பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதற்கு, 22.05.2024 அன்று, மனுதாரர் கோரியவாறு 14 பக்கங்கள் கொண்ட ஆவணங்களை இணைத்து பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

v. அதன் பின்னர், மனுதாரருக்கு 17.04.2026 மற்றும் 11.05.2026 ஆகிய தேதிகளில் பதில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அக்கடிதங்களின் நகல்களும், ஒப்புகை அட்டைகளின் நகல்களும் ஆணையத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3) விசாரணையின் முடிவில், கீழ்க்கண்ட உத்தரவை இவ்வாணையம் பிறப்பிக்கிறது:-

மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலர் குறித்துரைத்த காலத்திற்குள் உரிய பதில் கடிதங்களை மனுதாரருக்கு அனுப்பி வைத்து, அவற்றின் நகல்களையும், மனுதாரர் அவற்றை பெற்றுக் கொண்டு அனுப்பிய ஒப்புகை அட்டை / இணைய தள பதிவு ஆகியவற்றை ஆணையத்தில் சமர்ப்பித்துள்ளார். மனுதாரரால் கோரப்பட்ட தகவல்கள் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுளளது என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. ஆகவே, இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் SA 5883/விசாரணை/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்ககம் (தொ.அ.ஈ)
எண்.53, ESI மருத்துவமனை, பிரதான கட்டடம்,
மேடவாக்கம் நெடுஞ்சாலை, அயனாவரம்,
சென்னை - 600 023

திரு க.மனோகரன்,
எண்.65/1, காந்தி நகர், 1-வது தெரு,
சங்கரன் கோவில்,
தென்காசி - 627 756

Copy to File
CR/PA